உ

முருகன் துணை.

கழுகுமலை

சுப்பிரமணியர் காவடிச்சிந்து.

இஃது சென்னிகுளம்

அண்ணாமலைரெட்டியார்

இயற்றியது,

நல்லாசிரியன் பத்திராதிபர்

ம-ா-ா-ஸ்ரீ, கா. ரா. நமசிவாயமுதலியார் மாணவரும்

விஜயவிகடன் பத்திராதிபருமான

க. ச. கதிர்வேலுநாடார் அவர்களால்

பார்வையிடப்பட்டு.

கு. ஆ. கிருஷ்ணசாமி முதலியாரால்

சென்னை சூளை,

தனலக்ஷ்மி நர்த்தனம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை 1915. அணா 2

முகவுரை.

நாம் இந்தகழுகுமலை ஸ்ரீசுப்பிரமணியர் காவடிச்சிந்துக்கு முகவுரை எழுதவேண்டிய அவசியமில்லை ஏனெனில் இப்புத்தகம் பெரியோர்களால் பாடப்பட்டதாலும் ஸ்ரீசுப்பிரமணியர்மீது பாடியதாதியாதலினாலுமே ஆனால் நாம் இப்போது முகவுரை எழுதவந்தகாரணம் யாதெனில் இச்சிந்தானது நீண்டநாளாய் பக்திமான்களால் பாடஞ்செய்யப்பட்டு அவரவர்கள் பிரார்த்தனைகாலங்களில் பக்தியோடு பாடப்பட்டுவந்தன இத்தகையபாடலை சிலகமது நாட்டுநாடக்காரர்கள் சிங்காரரசங்களில் கலந்துபாட ஆரம்பிக்கவே இதில் அசப்பிய மிருக்கிறதென்று நமதுகாருண்ய கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களில் சிலருக்குத்தென்பட்டு அப்பாசுரங்களில் சில அசப்பியங்கண்டுபிடித்து வழக்குகொண்டுவந்து பொது ஜனங்களின் விருப்பத்திற்கிணங்க அவ்வழக்கை தாங்களே நடத்தாமல் நிறுத்திக்கொண்டார்கள் இதனால் சிலர் இக்காவடிச்சிந்தின்மீது ஒருவித கருத்துகொண்டும் இதைப்பாடினால் என்னவருமோ எதுவருமோ வென்று பயந்தும் பக்தியாயுள்ளவர்கள் பலரும் இப்பாடல்பாடுவதைநிறுத்தியே விட்டார்கள்.

இதை இத்தேசித்து யாம் இப்புத்தகத்திலுள்ள பாடல்களில் எது அசப்பியமென்று தோன்றுகிறதோ அவற்றை எல்லாம் அறவேநீக்கி, அங்கு அடிகளை குறையாமலும், பதஅருத்தங்கெடாமலும், சந்தக்குணிப்பு தவறாமலும், பெரியோனாகியசென்னிகுளம் அண்ணாமலைரெட்டியார் கவியின் கருத்துக்குஇடறுபடாமலும்பாடி பிழையறப் பரிசோதித்து திருத்தத்துணிந்தனம். இவற்றைக்கண்ணுறுவோர் எம்மீது யாதொருகருத்துங் கொள்ளாது அன்போடு இத்திருத்தப் பொருத்தங்களை அங்கீகரிப்பார்களென நம்பிகிறேன்.

இனாம் இனாம்

அரையணாஸ்டாம், அனுப்புகிறவர்களுக்கு விஜயவிகடன் பத்திரிகையொன்றும், சென்னையிமீது சீட்டுக்கவி என்ற புத்தகமும் இனாமாக அனுப்பப்படும்.

விஜயவிகடனாபீஸ்

மதராஸ் என்-ஈ

உ

கடவுள்துணை.

கழுகுமலை

சுப்பிரமணியர் காவடிச்சிந்து.

விநாயகர் துதி.

திருவுற்றிலகுகங்க வரையிற்புகழ்மிகுந்து
திகழத் தினமுழைந்த வாசனை திரு
மகிமைச் சுகிர்ததொண்டர் நேசனை பல
தீயபாதக காரராகிய சூரர்பாவரு மாளவேசெய்து
கிரௌக்கிரிபிளந்த வேலனை உமை
தபாக் குழல்கொளவஞ்சி பாலனை

மருவுற்றிணர்விரிந்து மதுபக்குமுழங்க
மதுமொய்த் திழிகடம்ப வாரனை வீக
சிதசித்ர சகியுந்து வீரனை எழில்
மாகநாகரு மாரியாகிய மாதுமேழுடு கிராதநாயகி
மருவப் புளகரும்பு தோளனை யெனை
யருமைப் பணிகொளுந்த யாளனை

தெரிதற்சரியமந்தி ரமதைத் தனதுதந்தை
செவியுட் புகமெழிந்த வாயனை இள
ரவியிற் கதிர்சிறந்த காயனை யகல்
தேவநாடுகெடாதுநீடிய சேனைகாவல னாகவேவரு
திராலுற்ற சிவகந்த நாதனை விரி
மறையொத் தொளிருகின்ற பாதனை

அருளற்றிட நினைந்து மனதிற் களிசிறந்து
மதுரக் கனிவுந்தெது கூடவே பல
விதமுற் றிலகுசிந்து பாடவே விரி
வாரிநீரினை வாரிமேல்வரு மாகிரேர்தரு மாமதாசல
வதனப் பரணிரண்டு தாளையே நய
முதவப் பணிவமிந்த வேளையே 1

முருகன் துதி. வேறு.

ர்வளர் பசுந்தோகை மயிலான் வள்ளி
செவவிதழலாதினிய தெள்ளமுது மயிலான்

போர்வளர் தடங்கையுறு மயிலான் விமயி
பொன்னடியை யின்னலற வுன்னுதல்செய் வாமே

குஞ்சரவணங் காவல் வீடா தபடி-
கொஞ்சிமரு வுஞ்சர ரஞ்சிதவி சேடா

பைஞ்சர வணங்காவல் வீடா வளரும்
யாலவன மாலையொடு காலைநினை வாமே

வல்லவுணர் வழியாதும் விட்டு தெருள
வஞ்சமர்செய் கந்தனிடம் வழியடிமை பட்டு

நல்லவுணர் வழியாது மட்டு மிஞ்சு
ஞானபர மானந்த மோனமடைவாமே

ஒருதந்த மாதங்க முகத்தான் மகிழ
வுத்தம கனிட்டனென வுற்றிடு மகத்தான்

வருதந்த காதங்க முகத்தான் எவரும்
வாழ்த்துருக நாயகனை யேத்துவல் செய்வாலே. 2

கழுகுமலை நகர்வளம் வேறு

தெள்ளுதமி ழுக்கதவு சீலன் துதி
செப்பணுமலைக்குமனு கூலன் வளர்
செழியப் புகழ்விளைத்த கழுகுமலைவளத்தைத்
தேனே சொல்லு வேனே

வெள்ளிமலை யொத்தபல மேடை முடி
மீதினிலே கட்டுகொடி யாடை யந்த
வெய்யவ னடத்திவரு துய்யவிர தப்பரியும்
விலகும் படி யிலகும்

வீதிதொறு மாதிமறை வேதம் சிவ
வேதியர்க ளோதுசாம கீதம் அதை
மின்னுமலர்க் காவதனிற் றுன்னுமடப் பூவையுடன்
கிள்ளும் கிள்ளைப் புள்ளும்

சிதளமு கிற்குவமை கூறும் நிறச்
சிந்துரங்கள் சிந்துமதத் தாறும் உயிர்ச்
சித்திர நிகர்த்தமின்னார் கத்தியணி குங்குமச்செஞ்
சேறங் காத நாறும்

நித்தநித்த முங்கணவ ரோடுங் கூடி
நீடியேபி ணங்கிமனம் வாடுங் கரு
நீலவிழி யார்வெறுத்த கோலமணி மாலைதந்த
நெருங்கு மெந்த மருகனும்

கத்துகட லொத்தகடை வீதி முன்பு
கட்டுதர ளப்பந்தலின் சோதி யென்னுங்
காட்டுவதா லீரிரண்டு கோட்டுமத யானையிற்பல்
களிறும் நிறம் வெளிறும்

முத்தமிழ்சேர் வித்வஜனக் கூட்டங் கலை
முற்றிலு முணர்ந்திடுகொண் டாட்டம் நெஞ்சின்
முன்னுகின்றபோதுதொறுந் தென்மலையின் மேவுறு
மூனிக்கும் அச்சஞ் சனிக்கும்

எத்திசையும் போற்றமா றூரும் அதில்
இந்திரன் கொலுவிக்குஞ் சீரும் மெச்ச
மிந்தநக ரந்தனைய டைந்தவர்க் கனுவும்வெறுத்
திருக்கும் அரு வருக்கும்

துள்ளியெழு வெள்ளையலை மடக்கும் படி
சுற்றிலும் வளைந்தவகழ்க் இடக்கும் வல
சொன்னமலை பொன்மதிலும் மின்னவதி னாலேபுகழ்
தோன்றும் லோக மூன்றும்

கள்ளவிழ் கடப்பமலர் வாகன் குறக்
கன்னியை விரும்பிடுமெனி சாகன் வளர்
கழுகுமலை நகரின்வள முழுமையுமெ னுவிடங்
காதே மட மாதே 3

கோயில் வளம் வேறு.

சென்னிகுளநகர் வாசன் தமிழ்
தேறும் அண்ணுமலை தாசன் செய்யுஞ்
செகமெச்சிய மதுரக்கவி யதனைப்புய வரையிற்புனை
தீரன் அயில் வீரன்

வன்னமயில்முரு கேசன் குற
வள்ளியுதம்பணி நேசன் உரை
வாமேதரு கழுகாசல பதிகோயிலின் வளநான்மற
வாதே சொல்வன் மாதே

கோபுரத்துத் தங்கத் தூவி தேவர்
கோவிரத் துக்கப்பால் மேவி கண்கள
கூசப்பிர காசத்தொளி மாசற்றுவி லாசத்தொடு
குலவும் புவி பலவும்

நூபுரத்துத்தொனி வெடிக்கும் பத
நுண்ணிடை மாதர்கள் நடிக்கும் அங்கே
நுழை வாரிடுமுழவோசைகள் திசைமாசுணமிடியோவென
நோக்கும் படி தாக்கும்

சந்நிதியிற் றுஜத் தம்பப் விண்ணிற்
றுலிவருகின்ற கும்பம் எனுஞ்
சராசியை வடிவார்பல கொடிசூடிய முடிமீதிலே
தாங்கும் உயர்ந் தோங்கும்

உன்னதமாகிய விஞ்சி பொன்னாட்
டும்பர்களுக்கு மிஞ்சி மிக
வுயர்வானதுபெறலாலதில் அதிசீதள புயல்சாலவு
முறங்கும் மின்னிக் கறங்கும்

அருணகிரிநாவிற் பழக்மம் தரு
மந்தத்திருப்புகழ் முழக்கம் பல
வடியார்கணமொழிபோதினி லமராபதி யிமையோர்செவி
யுடைக்கும் அண்டம் உடைககும்

கருணைமுருகனைப் போற்றித் தங்கக்
காவடிதோளின்மே லேற்றிக் கொழுங்
கனலேறிப்மெழுகாய்வரு பவரேவரும் இகமேகதி
காண்டார் இன்பம் பூண்பார். 4

கழுகுமலை வளம். வேறு.

பொன்னுலவு சென்னிகுள நன்னகரண் ணமலைதன்
புந்தியின் மகிழ்ந்து நித்தம் நின்றவன் முந்தி
வெந்திரலரக்கர்களை வென்றவன் மயில்
போலவேனலின் மீதுலாவுகி ராதம-தமு னேகியோடி
பூவையை யுனது தஞ்ச மென்றவன் அவ
ளீயுவாவினையுமென்று தின்றவன்

மின்னுலவு சொன்னமுடி சென்னியணி விண்ணவர்தே
வேந்திரனுஞ் சித்தர்களுந்   துன்னியே   கதி
வேண்டியே யகத்திலன்பு   மன்னியே   சணி
வேலவன்கிரு பாகரன்குகன் மேவிடுங்கழு காசலந்தனின்
மிஞ்சியவளங்களை நா   னுன்னியே   சொல்ல
ரஞ்சிதமாக் கேளடியிற்   பன்னியே

மூசுவண்டு வாசவண்டு காவின்மொண்டு தேனையுண்டு
மோகனமுகாரிராகம்   பாடுமே   உய்ய
வேகமாய்ப்பேடையுடனே   நாடுமே   யவ
மோதுவாரிள நீரைவாரிவிண் மீதுலாவிய சிதளாகர
முகில்பெருஞ் சிகரமுற்று   மூடுமே   கண்டு
மயிலினஞ்சிறகைவிரித்   தாடுமே

தேசுகொண்டபாரதந்த வீரதும்பிராசியண்டர்
தேவதாருவைக்கரத்தாற்   பிடிக்குமே   சுற்று
மேவியகிளையைவளைத்   தொடிக்குமே   யொளிர்
சேயசந்திரனோடுரிஞ்சுபலாமாங்களிலேநெருங்கிய
தீங்கனிமதுரசத்தை   வடிக்குமே   மந்தி
பாம்கினின்றதனையள்ளிக்   குடிக்குமே

அந்தரமுருவிவளர்ந் திந்திரனுலகுநடந்
தப்புறம்போய் நின்றசையுஞ்   சந்தன   மரங்
தப்பிதமிலாதுகையால்   வந்தன   மெங்க
ளாறுமாமுக நாதனுக்கிடு மாறுபோலவி காலமுற்றகொம்
பத்தனையு நின்றுதலை   சாய்க்குமே யண்டப்
பித்திகை தனிலுஞ்சென்று   லேய்க்குமே

கந்தரந்தொறுங்கிடந்து கந்தரம்ப யந்தொதுங்க
கர்ச்சனை புரியுந்திரற்   சிங்கமே   நெஞ்சி
லச்சமுறவின்னுறைமா   தங்கமே   தடங்
காவிலேசில தாவிலேலவளர் மாவிருனடு வேகிருதர்கள்
கார்முகமெய்யுங்கணைக   டேறுமே   அதில்
வார்மதுவாம் வாரியுவர்   மாறுமே

காலவடி வேனெடிய தாள்கொடிய   நாகமுமிழ்
காரிபிணைதாரிகணை   பானலே   யன்ன
கூர்நயனவேடமின்னு   ரேனலே   காக்கும்
காலைமேலெறிபோதுவார்கவணோடுமாபணி தேசுவீசவே
கதிரவன்றனதுமுகஞ்   சுழிக்குமே   அவன்
குதிரையுங் கண்ணைஞ்சுருக்கி   விழிக்குமே

ஓலமலி கோலமேலேதலை சூழ்ஞாலமீதி
அற்றவரின்பத்துடனே வானமே செல்ல
வைத்தபலசித்திரசே பானமே யென்ன
வேலங்குகோல்கதிருங்கிலாக்கிளி பாங்கிநீல்லறுவேங்கைபூங்கழை
யொன்றோடொன் றுவப்புகொண்டு நீளுமே கோள்கள்
சென்றுசென் றுநின்றுநின்று மீளுமே. 5

வாவி வளம். வேறு.

புள்ளிக்கலபமயிற் பாகன் சத்தி
புதல்வனுனகன யோகன் பலை
போலத்தான்றிரண்ட மோலப்பன்னிரண்டுவாகன்நல்விவேகன்

வள்ளிக்கிசைந்தமுரு கேசன் அண்ணா
மலைக்கவிராஜன்மகிழ் நேசன் என்றும்
வாழுங்கழுகுமலைவாவிவளஞ் சொல்வேன்மாதேககளிப்போதே

வெள்ளைநாரைகொத்தும் வேளை தப்பி
யேற்கொண்டெழுந்துசின வாளை கதி
மீறிப்பாயுந்தோறுங் கிறிச்சாயுந்தென்னம் பாளை யுடன்றுகழை

தெள்ளுநெம்பிள்ளையன்னப் பேடும் அலஞ்
சேவலானதுவு மூடும் பின்பு
தேமலர்த்தவிசிற் சாமத்தினில் நாடும் உறவாடும்

மின்னிக்குலவிமதி மானும் வரி
வெள்ளைபணிலராச த்தானும் மட
மின்னார்விழிகளென்ன மன்னுகெண்டை முத்தமீனுமடமானும்

வன்னத்தாமரையைக் கண்டு வாயின்
மதுராராகப்பாடிக் கொண்டு மதி
மயங்கிப்பேட்டினுடன்மு யங்கியேகிடக்கும் வண்டு கள்ளை யுண்டு

அந்தரத்துப்பெண்கள் நாடி யங்கு
அன்பாகவேவிளை யாடிச் செல்லு
மங்கலார்நடக்கு நன்னருடைகி யன்னஞ்செல்லும்பின்னமே

மந்தமேதியுள்ளே யெட்டும் கிளை
வாராலுமெழுந்துமே முட்டுமே போது
மடிசார்ந்து கன்றுதனை-நினைந்து கண்டமட்டும் பாலைக்கொட்டும்

துதி.

வேறு.

மரகதவிகசித வொளிதவழிருசிறை
மருவியமயின்மிசை யனுதினமுறைதருவாசன் பவநாசன்
குரகதசுகமணி வளிரதநடவிய
குவலயசரகர னெனுமதனணிமகிழ் கோலன்பரைபாலன்
பரிபுரவணிகல கலவெனவொலிபுரி
பரிதியுதயமதி லவிழ்மறைமலர்நிகர் பாதன்குகநாதன்
திரிபுரமவையொரு நொடிதனிலெரிகொடு
சிதைவுறநகையுரி சிவன்மனமகிழுபதேசன் விசுவேசன்
பதுமநிதியெனொடு பணிலநி தியுமெழில்
பரவியசுருபியு முருசுரபுரன்மகள் பாகன் கனயோகன்
சத்தளகளினத விசுமிசை வதியொரு
சதுமுகவிதிசிறை யதிலுறநிறுவிய சாகன் நடவாகன்
குரைதிரைவரைநிரை புரைதரவுலவிய
குரைவயினடுவுறை நிருதரைமுடுகிய கோபன் கமழ்நீபன்
பரைசிவைபகவதி யுதவியசரஹண
பவனறுமுககுகன் மிசைமதுநிதகவி பாடுஞ்சுகநாடும் 7

துதி.

வேறு.

பவணகிரியதனுட்டானே மன்னுவானே பல
பாழிலேயலையாமலின்புற நாளுமேயருள்மேவுகண்கொடு
பாராய் இன்னல் தீராய்

அவுணப்பகைமுடித்தோனே புண்யவானே பதி
யாருமேதருவாறுமிங்கிலே யாதலாலருள் வாயினம்புரி
யாதேபண்ணுஞ் சூதே

விரசப்பெருவிதனத்தாலே மண்ணின்மேலே கனம்
வீணிலேயுழ தாதுகக்தவி சாகனேபுரி நீயும்வஞ்சமென்
மீதே யெண்ணி டாதே

நரச்சமன்வருமப்போதே பின்னில்லாதே பவ
நாளுமேமற் வாதுநின்சிறு பாதமாகிய சீதபங்கய
நானே உன்னி னேனே

நிமலப் பெருமிதச்செவ் வேளே கன்னல் வேளே
நீடுபாணமை தான்மருண்டிடை வாடும்ரதரிடங்கெடாவாவ
நீயே யெண்ணு வாயே

குமரிக் கதிபரற் கானே கண்ணி ளுனே
கோதிலாதத போபலம்பெறு நீர்பாலகலாது றைந்தருள்
கோவே யென்னுள் வாவே

கடல்சுற் றியவுலகம் பாலே மின்னல் போலே
காயமாகிய தீயவன்பிணி மேவியேதவி யாமலன்பொடு
காவே யென்னை யாவே

இடமற் றவனினுடைச் சேயேயன்னைநீயே
சேவையேசெயுஞானபண்தேர் நாவினூடினிதாவினோங்கிடு
தேனே பொன்ன னுனே

துதி.

வேறு.

செந்தின்மாநகர்வாழ் கந்தநாதனிரு
செய்யபாத கயஞ்சமே
குய்யமேவு தஞ்சமே
செப்புவது கொஞ்சமே
தீயபாதகவி ரோதமாய்விட்டுத்
திருப்புவாயே நெஞ்சமே

பந்தபாசமிதை யெந்தவேளையினும்
பார்க்கும்போது தொல்லையே
லார்க்குமாவ தில்லையே
பாரமேரு வில்லையே
பற்றுநாதன்மது பெற்றநீதென்மீது
பணுவல்சூடு வல்லையே

மங்கைமார்களிதுங்க மேவுமத
வாரணங்கொள் கும்பமே
பூரணசந்திர விம்பமே
மாகணங்கொள் தம்பமே
மாரவேளரசு மண்டபத்தருகில்
வைததாங்கு கம்பமே

செங்கை சூரியோதய யங்குலாவமலர்
சீதபத்ம தளமே வாயி
லொளுசொத்கள் ளமே யிதழ்
திவ்யபொற்ப வளமே யெல்லு
சிந்தித்தாற்குமரன் கந்தப்பாதமலர்
சேர்வதெவ்வா றுளமே

பன்னி மான்விழி மன்னவே கடையில்
வக்ரதந்த சங்கமே கொண்ட
வுக்ரதுங்க சிங்கமே யென்ன
மறலிதூதர் பொங்கமே யுற்று
வந்தவேளை நெஞ்சே கந்தவேளை நினை
மருவுறாது பங்கமே

சென்னிமா நகரண் ணாமலைக்கவிஞன்
தேச மெங்கு மிசையே பெறப்
பேசுதந்த மிசையே சற்றுந்
தீர்ந்திடாத நசையே வைத்துச்
சேவலாளிபத காவலோடுபணி
தினமுநாடு விசையே,

சுரம்போக்கு—நற்றாயிரங்கல்.

வேறு.

ராத்திரி வேளையில்வீட்டுப்
பக்கத்தில்வந்து மேவி பஞ்ச
பாதகனொரு பாவி சிறு
பாவையை மெள்ளக் கூவிக் கையைப்
பற்றிக்கூட்டிக்கொண் டேகினான்பதை
பதைக்குதேயென்ற னாவி

சோதனைப்பிர காரமாயென்னைத்
தொடர்ந்ததே பெருந் தோஷம் எவர்
சூதினால் வந்த யோசம் இனித்
தொலையுமோ பிள்ளைப் பாசம் இதைச்
சுற்றத்தாரிந் தாலெனக்குமுன்
சொல்வதேபரி யாசம்

தேனிலக்கிய காவனந்திகழ்
சென்னிமாநகர் வாசன் தி
செய்யுமண்ணாமலை தாசன் செப்புஞ்
செந்தமிழ்க்கரு ணேசன் நாளுஞ்
சிந்தனைசெயுந் தொண்டர்தீவினை
தீர்த்திடு முரு கேசன்

நானிலம்புகழ் கழுகுமாமலை
நாயகன்பாண்டி நாட்டில் நெஞ்சில்
நாணம்விட்டுத்தன் பாட்டில் வெப்பம்
நண்ணியபாலைக் காட்டில் மகள்
நடக்கவேண்டிமுன் னடக்கமாத்தெய்வம்
லபித்ததோமண்டை யோட்டில்

மணமுகந்தொருதையல் பின்செல
வயதுமீறின மாதோ இக்த
மார்க்கந்தோன்றின தேதோ உயிர்
வாசனைப்பல னீதோ ஐயோ
மாதம்பத்தாஞ்சுமந்து பெற்றவென்
வயிறுந்தானெரி யாதோ

செய்யபஞ்சணைபொருந்து
சிவந்துகொப்பள மாகும் நெரிஞ்
சிப்பழமென்று நோகும் அவள்
சீறடிரண்டும் வேகும் படி
தீயுங்கானலிற் காயும்வேளிலாந்
தீயிலெப்படிப் போகும்

தேடினுங்கிடை யாததாகிய
திரவியக்கரு கூலம் போலே
செனித்தபெண்ணுக்குச் சீலம் வேதே
திரும்பினதென்ன காலம் வயது
திரண்டிடமுன்ன மருந்திடற்கெவன்
செய்தானோ விந்த ஜாலம்

காடுசேர்கையிற் கரடிவேங்கைகள்
கூட்டுமேயார வாரம் அதைக்

காதிற்கேட்டுவி சாரம் வைத்துக்
கலங்குவாளந்த நேரம் என்றன்
காதலிதன்னையாதரித்துயிர்
காப்பதுவேலன் பாரம்

தலைவி யிரங்கல்.

வேறு.

நேமமாய்ப்பணியண் ணுலைக்குதவு நீதனைக்
சழுகுமலை நாதனை நெஞ்சில்
நினைக்கநினைக்கமீறிஎனைக்கொல்லுதேயாசவேதனை

கோமளக்கடலிலேயிருந்ததிரைக் கூட்டமே
கொண்டதேபோ ராட்டமே செய்து
கோரமேவிளைத்தாற் றீருமோவெனக்குவாட்டமே

வெள்ளத்திரையின்மேலே துள்ளித்திரியுஞ்சுறுமீனமே
பிணியுமுண்டோ மானமே பெரும்
விறல்கொண்டதனுலேற்குதில்லை யன்னபானமே

அள்ளற்கழிக்கரையுண்மெள்ளக்குலவிவரு மாமையே
கொடியமனத் தீமையே நாளு
மதிகரித்திடலா லவமதிக்குதிந்தச் சீமையே

பொங்குமதுமலர்களெங்கும்பரிமளிக்கும் புன்னையே
பெற்றுவளர்த்த வன்னையே யெந்தப்
போதும்வைதுவைதுமோதுகிறாள்பாவி என்னையே

தங்குநித்திலம்புரி யிங்கிதவலம்புரிச் சங்கமே
தென்றலுமொரு சிங்கமே போலத்
தாக்கவேமயங்கி யேக்கமாமெலிந்தே னங்கமே

மங்கைமார்களத ரங்கணேர்பவள் வல்லியே
பிரியேனென்று சொல்லியே போன
வாசகடப்பன்வரநேசத்துடன்சொல்லுமோ பல்லியே

அங்கயத்தினிறைபங்கயத்துள்ளுறை யன்னமே
பிரியம்வைத்து முன்னமே கட்டி
யாதரித்தவேன்முருகன்றனைக்கண்காணேனோ இன்னமே

தலைவியின் ஊடல்.

வேறு.

ஆறுமுகவடி வேலவனே கலி யாணமுஞ்செய்ய வில்லை சற்று
மச்ச மில்லாமலே கைச்சரசத்துக்கழைக்கிறா யென்ன தொல்லை
பாசமிலாத வென்னோடே விளப்பாதேவீண் பேச்சு சும்மா
வெள்ளைத்தனமாகத் துள்ளுகிறாய்நெஞ்சில்வெட்கமெங்கே போச்சு
மேட்டிமையென்னிடங்காட்டுகிறாயினிவேறில்லையோசோலி இதை
வீட்டிலுள்ளார்கொஞ்சங்கேட்டுவிட்டாலதுமெத்த மெத்தக் கேலி
நாட்டிகஞ் சேர்கழு காசலமாநகர் தங்கமுருகோனே இந்திர
ஜாலத்திலென்னைக் காலைப்பிடித்தாலும்சம்மதியே னே
அக்கரைக்காரர்க்குப் புத்திகொஞ்சமென்பாராருபழமொழியே நீ
அப்படி யென்னைப் பலாத்காரஞ் செய்திடலாச்சுது பெண்பழியே
சர்க்கரைக்கட்டிபோல்வள்ளிதெய்வானைபாந்தையலுனக் கிலையோ
தையலரைச்சேரும் பையலுனக்கென்ன தானுமொரு நிலையோ
அம்புவியிற்சிறு பெண்களின்மேலுனக்காசையேன்காணுதையாநீர்
ஆக்கபொறுத்தாலு மாறப்பொறுதவராகவே தோணுதையா
நம்புமண்ணுமலை தாசன்பணியும்நளினமலர்ப் பாதா கொஞ்ச
நாளைக்குமேலொரு வேளையிலேவனம் வந்திடகாதா 12

பாங்கிதலைவி நிலைமைகூறித் தலைவனை யழைத்தல்.

வேறு.

கண்ணாயிரம்படைத்த விண்ணாரிடங்கரித்த
கனவயிரப்படை யவன்மகளைக்கொண்ட கர்த்தனே திருக்
கழுகுமலைப்பதி யனுதினமுற்றிடு சுத்தனே

அண்ணாமலைக்கிடர்க ளண்ணாதொழித்துமிக
வகமகிழத்தன தருளையளித்திடு மையனே இசை
யரவமும்வெட்குற மயிலைநடத்திய துய்யனே

மின்னேகமல்மலர்ப் பொன்னேயெனப்புகல
விசித்திரத்தினை நகைகடரித்தொளிர் மெய்யினாள் கதிர்
விரவியசித்திர வளையலடுக்கிய கையினாள்

என்னேரமுமனதி லுன்மீதில்தியானங்கொண்
டெழுதியசித்திரமெனமவுனத்தினி லிருக்கிறாள் வள்ளத்
திமிறபுத்தமுதினையும்வெறுத்தரு வருக்கிறாள்

கும்பத்தினைச்சினந்து வம்பைப்பிதிர்த்தெழுந்த
காடியிடைமுற்றிலுமொடியவளைத்தது அங்கமே தினம்
குலவுகடப்பினிற் நினைவுதனைத்தனள் மங்கையே

செம்பொற்சிலம்புகள் புலம்பப்பெருந்தெருவிற்
றிகழ்ந்தருசிற்றில்கள்புரிவதைவிட்டவள் தியங்கினாள் உன்றன்
றிருவழகைக்கரு விழியுளிருத்தியே மயங்கினாள்

போராடுதற்குரிய கூரார்மலர்க்கணைபெய்
புகழ்பெறுசித்தசன் தனுவதனைப்பொரு புருவத்தாள் தவம்
புரிபவரைத்தன தடியில்விழப்புரி பருவத்தாள்

சிராகசிந்தைதனில் நேராகவைத்தனது
திருவருட்கனி யதனைபருத்தியே காரையா யித்தத்
தெரிவையுளத்துணைவலதுபிடித்தவ ராரையா. 13

தலைவிபாங்கியை தூதுவிடுத்தல்

வேறு.

பூமிமெச்சிமென் ஞாலக்கோர்துணை யானவன்
மயில்வானவன் ஒரு காணவன் எனப்
புனத்தைக்காக்கும் வள்ளி
மனத்தைபார்க்கமெல்லப் போனவன்

செம்முற்றகழு காசலேசனையே தேடுதே
மனம்வாடுதே கால்தன் ளோடுதே யிரு
செங்கைதங்கிநின்ற சங்கினங்கள்கழன் றோடுதே

தென்றலானபுலி வந்துகோபமொடு சீறுதே
தடுமாறுதே யிதம் கோறுதே மெத்த
தீமையாம்விருளி லூறலாகிறியு மீறுதே

நற்றமானபுயம் ரண்டும்விம்மிவிம்மிக் கொண்டுதே
திகழ் மண்டுதே வெப்புங் கண்டுதே மலர்க்
கொம்புபோலமென்ம ருங்குலா துந்து வண்டுதே

உள்ளமெல்லமெல்ல கந்தன் மீதுநினைந் துருகுதே
முத்தங்கருகுதே கண்ணீர் பெருகுதே என்ற
னுச்சிக்கேறிபக்தி
பித்தங்கிறுகிறென்று வருகுதே

வள்ளமேவுபசும் பாலுந்தேனுமரு வருக்குதே
கசந்திருக்குதே துன்பம் பெருக்குதே வன்ன
வாருந்தாறுமாறுச் சிறவேவினைமும் பருக்குதே

பாரமான சமுசார வேடனம்பு பாயுதே
யுடல்தேயுதே மலர் தீயுதே கொடும்
பாவியானமதி யாவிசோரவந்து காயுதே

மாரவேளினல் கோரமானபெரு வாதையே
யெனுந்தீதையே திரத் தூதையேசொல்லி
வாட்டந்தீர்குகனைக்கூட்டிவாடியடி கோதையே 14

பாங்கிதலைவியின் அவயவத்தருமை சாற்றல்.

வேறு.

சந்தவரை வந்தருக நாதா பரை
யந்தரிம னோன்மணியா மாதா அருள்
சண்முகசடாட்சரவி நேதா
குமைக்காதா சூரர் வாதா வன
சஞ்சரிவெண் குஞ்சரிச மேதா

செந்தமிழண்ணமலையை யாளாக் கொண்ட
கந்தவரவிந்தமலர்த் தாளா கட்க
சிந்திடுகடம்பணியுந் தோளா
கெடுநாளா மறவாளா வுனைத்
தேடொர்குயிற் பேடுருவந் தேளாய்

சுந்தரமிருந்தகுழன் மேகம் அவள்
சொந்தநுதலிந்துவிலோர் பாகம் திருந்
தும்புருவம் வில்லொடுசெ நேகம்
தவயோகப்வென்ற னேகம் வஞ்சந்
தஞ்சவிழிநஞ்சினிலும் வேகம்

சந்தமலிகின்றமுக மிந்து வள்ளைத்
துண்டுசெவியென்பதுவே தந்து கன்னம்
சாளைநுனிநாசியின்ப சுந்து
மதுச்சிந்துதல்பொ ருந்து சிறு
சண்பகந்துப்பாமிதழ்சி வந்து

செங்கமுதபுட்பமதை யொத்து மொழித்
தேனுதவும்வாய்நகையோ முத்து கண்டஞ்
சீதரனுருதுவர நத்து
சொற்றித்தித்துப்பாகைக் கைத்து விடச்
செய்யுமென வுன்னலாமு ளத்து

குங்குமவாகங்கசகோ தண்டம் முன்கைக்
கோமகரயாழுலகமை விண்டம் கையைக்
கோகனகமோவெனம ருண்டம்
ஆழிமண்டலங்குவி கண்டம் நெருங்
குங்கெளிறுசிறுகிளித் துண்டம்

கட்டுகதிர்பட்டுமணி வம்பு இழி
பட்டுவழிவிட்டிடவே ழும்பு கிற
கட்டழகாம்வட்டகுடச் சொம்பு
யானைக்கொம்புசிவ சம்பு குடங்
கைக்குவளை யாதுபொற்ப றம்பு

மட்டுமிழ் பசுந்துளப மாலை செங்கண்
வளருகிறதவிசெனுமொ ராலை சிறு
வயிறுமயிர்சிற்றெறும்பு போலை
விரைவாலைவெள்ள மேலை கற்றி
வந்தசுழியுந்தியிடை நூலை

தாமரவபடமெனல முண்டு துடை
தங்கநிறச்செங்கதலித் தண்டு முழந்
தாட்குவமைகேட்கிலவை நண்டு

3

சினைகொண்டுவளர் பெண்டு
சாருங்கணைக்காலெனு மிரண்டு

பாடுதாரசுபர்குதிகந் றுகமே
பரவுபுறவடியிணைபுத் ஞகமே
பவளமதிதசவிரல்கள் நகமே
யம்போருகமேபத யுகமே
பண்ணுமிளஞ்சாயலேயா சகமே

மேனகையொடுருவசியிந்திராணி செல்வ
திருமுக்யகலை வாணி
மின்னாசிதன் றுருவங் காணி
நெஞ்சுகாண்ணி மலர்ப் பாணி
மீதுகுவித்துத்தொழுவார் பேணி

சேனையொடுவெந்துகருங் காவி
செய்யகருப்புச்சிலைவைத் தேவி
செய்யுமொருமன்மதனும் பாவி
எங்கடேவி யிடமேவியுட லாவி
திர்க்குமுளங் காத்திடுவாய் மேவி

தலைவன் வருத்தஞ் சாற்றல்.

வேறு.

வண்ணத்திணைமாவைத் தெள்ளியே
வாழ்க்கைக்குறக்குல வள்ளியே
வாங்கப்பிறக்கிட்ட கள்ளியே
வடமேருவைநிகராகிய புயமீதணிபலமாமணி
மாலைபடமெனத் துள்ளியே
வான்மதிவீசுந்தி யள்ளியே

கன்னத்திளிற்குயிற் சத்தமே
கன்றுதுபாரென்றன் சித்தமே
சந்திசெய்யுதோமப் பித்தமே

கனலேறியமெழுகாயின தினியாகிலு மடிபாதகி
காத்தருள்செய்துன்றன் சித்தமே, தந்தாற்
கைதொழுவேனுன்னை நித்தமே

வாடி இருப்பது வஞ்சமோ பொல்லா
வன்கருங்கல்லோ வுன்னெஞ்சமோ கொண்ட
மர்மப்பயித்தியங் கொஞ்சமோ உயர்
மறையாகமமுதுகாவிய மதிலேமொழிசுகமேதரு
மார்க்கமுனக்கென்ன நஞ்சமோ ஒரு
வார்த்தையுரைக்கவும் பஞ்சமே

மீதடக்கிடையாத சொன்னமே வுயிர்ச்
சித்திரமேமட வன்னமே அரோ
சிக்குதுபால்தயி ரன்னமே பொரு
சிலையானதுசொலேவேலென தினமேமிருகோடுவாதனே
செய்வதுகன்டிலே யின்னமே என்ன
செய்தேனோ நான்பழி முன்னமே 16

தலைவனோடுற்றமையை தலைவிபாங்கிக்குக்கூறல்.

வேறு.

செந்திலமாநக ரந்தனில்மேவிய
தேசிகனுமுரு கேசன் மயில்
வாகியிலேறுமுல் லாசன் சிறு
திங்களும்பணி சங்கமாசுண
முங்குலக்கிய கங்கையாறொடு
செஞ்சடாடவி மீதணிவார்செவி
சேரமுன் னோதுப தேசன் அடி
யார்தமையாள் விசு வாசன்

எந்தநேரமும் வந்தனைசெய்தடி
யென்னும் அன்னைமலே தாசன் துதி
பண்ணுமெய்ஞ் ஞானவி லாசன் என்னோ
டிச்சேமூர்ந்து தயங்கு மாலையில்

வந்துவண்டு முழங்கு சோலையி
லின்பசாகர மாகியநாடக
மன்புடனே செய்தான் மானே அந்தச்
சம்ப்ரம மென்னசொல் வேனே

மங்கைமாரபல ரும்புடைசூழ்தர
மாமலர் கொயதிடச் சென்றேன் அங்கோர்
பூமரத்தே தனி நின்றேன் சந்த்ர
மண்டலங்களை வென்றவாநன
மைந்தொடொன்று மிகுந்துவார் மதி
வண்டலோடுக டம்பெனுமாரமும்
வாரமுந் தோன்றிடச் சேர்ந்தான் என
தேனைபார்த்தே களி கூர்ந்தான்

பங்கயாசன மேலுறைநான்முகப்
பாதகனுமலர்க் கைதான் கொண்டுன்
சோதியையெப்படிச் செய்தான் அடி
பஞ்சுரஞ்சினு மஞ்சுசீரடி
கொஞ்சு ரஞ்சித வஞ்சியேபுவி
பட்டுநீ நிலைநிற்க வொண்ணுதென்று
பண்மலர் மெத்தையொன் றிட்டான் பின்பு
மென்மல ரெந்தன்னை தொட்டான். 17

வேறு.

துதி.

கன்னல்சூழ்பழ னம்புடைசூழ்கழு
காசலந்தனில் வாழ்பிர தாபனே தன
வாசமெங்குங் கமழ்கின்ற நீபனே வள
காதலோடிரு போதிலுமபல போதினார்பணிவார்மனத்துறை
சாரிருட்குவை நீக்கிய தீபனே அதி
சூரபத்மனைத் தாக்கிய கோபனே

சென்னிமாநகர் வாழுமண்ணுமலை
செப்புஞ்செந்தமி ழுக்கதி நேசனே சிவ
சுப்ரமண்ய னெனும்பிர காசனே கொடுஞ்

சிந்தைநைந்து புலம்பிநின்றுருமந்திரந்தனில் வந்தடைந்தனை
சேவிக்குங்குண மென்றெனக் காகுமோ மிகு
பாவிக்குந்துயரெப்படிப் போகுமோ

வந்தவர்க்குப் பழமபுளிக் காடியே
தந்திடச்சகி யார்தமைத் தேடியே பிர
பந்தமெத்தனை யெத்தனை கோடியே குலை
வாழையின்பழமோ கனிந்திடுமாழையின் கனியோ வெனும்படி
மதுரிதம்பெறவேநிதம் பாடியே யொரு
பரிசும்பெறுதுளம் வாடியே

வெந்தரைக்குள் வெடிப்பிடைப் பாலையே
சிந்து புத்தரைப்போல்வெறும் வேலையே செய்யும்
வீணனுன்விளங் குன்றண்டைக் காலையே எந்த
வேளையுந்துதி கூறவுந்துயர் நீறுமெம்பவ மாதவம்புரி
வில்வவேணிசேர் கற்பக வாலையே தரு
செல்லவனே யெனுங்கற்பகச் சோலையே. 18

தலைவியின் ஊடல்.

வேறு.

செந்தூர்வளர்முருக நாதா அருணோதயச்
செந்தாமரைநிகரும் பாதா திகழ்
சிந்தையிலண்ணுமலைசெய்நிந்தையையெண்ணுதருள்செய்
சித்திரவேற்கரவி நோதா உனதுவஞ்
செய்கையின்னமுந்தெரி யாதா

சந்தோஷமாகவேபோய் வீடு வீடுதோறுஞ்
சரசங்கொண்டாடுவதே பாடு வந்துன்
றன்னுடனேசேர்பிரியக் கன்னியர்கள்பேர்வரியச்
சகஸ்திரம்வேணுமேவெள் ளோடுதனித்தோரிடந்
தங்கியேமேயுமேவெள் ளோடு

வேசையர்வாசலிலே சென்று தம்பலங்களை
வெட்கமில்லாமல்வாங்கி மென்று தின்று
மெத்தப்பயித்தியங்கொண்டு சுற்றித்திரிந்தேமருண்டு
வீடுதேடிவந்தாயே இன்றுதொடவேமாட்டேன்
வேணுமென்றாலும்போடு கொன்று

ஆசைகொண்டவருக்கு ரோசங்கிடையாதென்பார்
அப்படிக்காகில்லிங்கு வாசம் வைக்கும்.
அந்தவிலைப்பெண்டுகளைச் சொந்தமெனக்கொண்டனையே
யாருமுன்னைப்போலே மோசம்போனவருண்டோ
ஆருஞ்செய்கிறாரேபரி காசம்

கந்தாசெய்யாதேபல வந்தம் புதமலரைக்
கசக்கியறிவார்களோ கந்தம் சற்றுங்
காதலிலாமற்சினந்தார் கையைவலிப்பப்பிடித்துக்
கசக்கினாலரோசகா நந்தம் உனக்கெங்குள்
கனவிலுமில்லையினித் தொந்தம்

எந்தப்பிறப்பினுமே வல்லி யுனையல்லாமல்
எவரையும்பாரேனென்று சொல்லி ஊரில்
எத்தனைபரத்தையரோ நித்தமுநீநத்தினையோ
இப்படிக்காசிகாஞ்சி டில்லி கன்யாகுமரி
எங்குப்பார்த்தாலுமில்லைச் சல்லி

கந்குகீரையில்லையே ஜாடைசொல்லிவைபவர்
கட்டுகிறாயேயெதற் காடை மானங்
காக்கவல்லவள்வன்பாலே சேர்க்கையிலாதேயன்பாலே
சாத்தாயேவேசையாதர் மேடை கைவசமாயோ
கலப்புல்லுந்தின்றாலுமே காடை

குங்குமஞ் சந்தனஞ்சவ் வாது கதம்பங்
குழுகுமென்றேபுயத்தின் மீது வாசங்
கொட்டுமெழுகி னெற்றிசந்தப் பொட்டொடுப கட்டுநிந்த
கோகிலம்புதிதாய் வந்த தேதுகடந்ததெல்லாங்
கொஞ்சஞ்சொல்வாய் பண்ணாதே சூது

தலைவி வருந்தல்

வேறு.

பாளைவாய்கமுகில்வந்தூர் வாளைபாய் வயல்சூழ்செந்தூர்
பாலனைப்புரியவந்த புண்ணியா எந்த
காலையுஞ்செய் கிறாய் முன்பின் னெண்ணியா

வேளையோவிடிந்ததையா நாளைவாரே னின்றுகையை
விட்டிடென்றாலும்விடாமற் பிடிக்கிறாய் பாலை
யொட்டவேயடிவெரிந்து குடிக்கிறாய்

நித்தமும் அண்ணாமலைசெய் குற்றமெண்ணாவேலாகண்டோர்
நின்னிதழ்ப்பவளங்களில் வெள்ளையே தென்று
லென்னசொல்வே னுன்குருபெண் பிள்ளையே

மத்தகநிகர்புயத்தின் மெத்தகரவாளைபட்டு
மாலைப்பிறைபோல வொளி தோணுதே யிது
கேலித்துறைபாகுமென்று நாணுதே

உன்னையும்விவாகமில்லா வென்னையுமேயன்னைகண்டா
லொன்றுஞ்சொல்விடாளே அடா பாவியே யின்று
இன்றிடுவேனென்பாள் பச்சை நாவியே

சன்னைசாடையாகவந்தென் றன்னைகண்டுபோவிரென்று
சாற்றிடுமென் னுண்மையான சொல்லையே விட்டுக்
கூற்றுவன்போல்வந்தாயென்ன தொல்லையே

சாறுசேர் கரும்புருசி யாயிருந்தாலும் வேரோடு
தான்பறித்துத் தின்னுவது ஞாயமோ முழு
ஆண்பிள்ளைக்கிதுவாது சம்ர தாயமே

நூறுநூறாயிரந்தரம் மாறிமாறியேபிறந்து
நோகுதே எந்தனுடைய வுள்ளமே சிதகம்
போகுதே பலவாய் வுந்தன் கள்ளமே 20

காலமநீடத் தலைவியிரங்கல்

வேறு.

பஞ்சுநிகர் குந்தளமின்னே சந்தளங்கள் விகசிதஞ்செய்
வாரிசாதனத்தில்வாழ் பொன்னே செய
வன்னமேயொளிர் சொன்னமே நடை
யன்னமேயிடை பின்னமேபெற வந்தகளமாரவஞ்சியே
யதிவிரும்பத்துட னுரைக்கும் வார்த்தைதயுகேளாசைமிஞ்சியே

அஞ்சுவயதான பருவந்தனிலெனது சிறுமணமுன்
அங்கச வேள்போலயுருவம் பெற்றே
அன்றுவந்து கயந்துமாலையி னெஞ்சழிந்து மயங்கவே யுணர்
ஆறுமுக வேலவனையே நினைவுகொண்டே மதிமருண்டே
ஆறுதில்லை யென்னவினையே

சென்னிகுளமேவிய வாசன் இனியதுதி யனுதினமுஞ்
செய்திடு அண்ணாமலை தாசன் பாடுஞ்
சிந்துமீது மிகுந்தமோகமுறுஞ் சசிலகு கஞ்சரோருக
திவ்யமுகங்களாறுமேழகண்களிற்கண்டாற் துன்பங்களெல்லாம்
காதவழியோடி சேருமே 23

காவடிச்சிந்து முற்றிற்று.

திருப்புகழ்.

இசைந்த சூலம் கரியுரிபோர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியுடையுடையு மழுமானும்
அசைந்த தோளும் திங்களு மாலையு முடிமீதே
அணிந்த யீசன் பரிவுட னருளிய குருநாதா
உகந்தசூரன் கிளையுடன் வேறர முனிவோனே
உகந்தபாசக் கயிறொடு தூதர்கண் மெலியாதே
அசந்தபோதென் துயர்கெடமயில்மிசை வரவேணும்
அமைந்தவேலும் புயமிசைமேவிய பெருமாளே

வேறு சந்தம்.

வங்கார மார்பிலணி தாரொடுயர் கோடசைய
கொந்தார மாலை குழலாரமொடு தோள்புரள
வண்காதி லோலைகதிர் போல ஒளி வீச இதழ் மலர்போல

மஞ்சாடுசாபநுதல் வாளனைய வேய்விழிகள்
கொஞ்சார மோககிளி யாகநகை பேசியுற
வந்தாரைவாருமிந நீருறவே ணுசமைய விடமாதர்

சங்காளர்சூது கொலைகாரர் குடிகேடர் சுழல்
சிங்கார தோளர்பண ஆசையுளர் சாதியிலர்
சண்டாளர் சீச்சியவர் மாயவலைபோட்டியே வுழலாமல்

சங்கோதை நாதமொடு கூடிவெகு மாயை யிருள்
வெந்தோடமூல அழல் வீசவுப தேசமது
தன்காதி லோதியிரு பாதமலர் சேர அருள் புரிவாயே

சிங்கார ரூபமயில் வாகன நமோநமென
கந்தா குமாரசிவ தேசிகா நமோநமென
சிந்தூர பார்வதி சுதாகர நமோநமென விருகோதை

சிந்தான சோதிகதிர் வேலவ நமோநமென
கங்காள வேணிகுரு வானவ நமோநமென
தின்சூர ராழிமலை தூள்படவை வேலையுடு முரு[illegible]கானே

இங்கித வேதபிர மாவைவிழ மோதியொரு
பெண்காத லோடுவன மேவிவள்ளி நாயகியை
இன்பான தேனிரச மார்முலைவிடாதசுர மணியார்பா

எண்டோளர் காதல்கொடு காதல்கறி யேபருகு
செங்காடு மேவிபிர காசமயில் மேலழகோ
டென்காதல் மாலைமுடி ஆறுமுகவாவமரர் பெருமாளே